பெரிய தபாற் கந்தோரில் புதினப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டிருக்கிறது.

# ஸ்ரீ லங்கா

தகவற்பகுதியின் வாராந்தப் பத்திரிகை

மலர்: 6 | 1963, மார்ச்சு 20 ந் திகதி | இதழ்: 52

# வலுவு குறைந்தோரின் புனர் வாழ்வு

## சமூகத்தில் அவர்க்குரிய இடம்

வலுவுகுறைந்த ஒரு நபர் நினைவுக்கு வரும்பொழுது, அநேகமாக அவர் எதனை இழந்துள்ளாரோ அதனையும் அதனல் அவருக்கு ஏற்படும் இடுக்கணையுமே மக்கள் நினைப்பதுண்டு. குருடர் கண் இழந்திருப்பதையும் செவிடர் ஊமையர் கேட்கும் சக்தியையோ பேசும் சக்தியையோ இழந்திருப்பதையும், முடவர் கைகளையோ, கால்களையோ உபயோகிக்க முடியாதிருப்பதையும் மேலோட்டமாகப் பார்ப்பவர்கள் கவனிப்பார்கள். இதே நபர்களில் ஹீன மடையாத புலன்களும், அந்தக்கரணங்களும் இருக்கின்றன என்பதை எப்படியோ மறந்துவிடுகிறோம். அவர்களில் மற்றும் திறமைகளும், சக்திகளும் கூட இருக்கலாம். அவற்றைக் கண்டறிந்து, அபிவிருத்தி செய்து, நற்தேவைகளுக்குப் பயன்படுத்தலாம்.

அநேகமாக வியாதியினலோ விபத்தினலோ தான் மனிதன் வலுவிழக்கிறன். எனவே இவ்வாறு ஏற்படுவதைப் பெரும்பாலும் தவிர்க்கலாம் அல்லது குணப்படுத்தலாம். அத்தகைய முறைகள் தோல்விகண்ட இடங்களில், மிக முன்னேற்றகரமான நவீன முறைகளைக் கையாண்டு, உகந்த புனர்வாழ்வு வழிகளை அனுசரித்து, அங்க நிறைவு பெற்ற நபர் செய்யக்கூடிய வேலைகள் அனைத்தையும் அல்லது பெரும்பாலானவற்றை வலுவு குறைந்த ஒரு நபரைக்கொண்டு செய்விக்கலாம்.

> அகில உலக வலுவு குறைந்தவர்கள் தினத்தையொட்டி சமூக சேவைப் பகுதி உதவி அதிபதி திரு. எஸ். ஜே. இரத்தினசிங்கம் அவர்கள் விடுத்த செய்தி.

### அவர்களும் வாழலாம்

எனவே வலுவு குறைந்தவர்கள் நம்பிக்கை இழக்கவோ அல்லது விரக்தி மனப்பான்மை கொள்ளவோ வேண்டியதில்லை. குருடர் இருளில் வாழ்ந்தாலும், தங்கள் கைகளைக்கொண்டு, பார்த்து, வாசித்து வாழலாம். செவிடரும், ஊமையரும் என்றென்றும் நிசப்த உலகில் வாழ வேண்டியதில்லை. எனெனில் அவர்கள் உதட்டு அசைப்பு, சமிக்ஞை மொழியினல் மற்றவர்களுடன் தொடர்பு கொள்ளலாம். இழந்த அல்லது சிதைந்த தசை இரத்தக் காணங்களுக்குப் பதிலாக உலோகத்தில் அல்லது மாத்தில் செய்யப்பட்ட செயற்கைக் கருவிகளைப் பயன்படுத்தலாம். இதேபோன்றே மற்றும் பல நவீன உபாயங்களும், கருவிகளும், உபகரணங்களும், வலுவு குறைந்தோர் சமூகத்தின் சகஜ வாழ்வில் முன்னரிலும் பார்க்கச் சுலபமாகப் பங்குகொள்ள உதவியுள்ளன.

உலகின் அதிக அபிவிருத்தி அடைந்த நாடுகளில் உள்ள புனர்வாழ்வு நிபுணர்கள் தம் நாடுகளில் உள்ள வலுவு குறைந்தோரில் அதிக விகிதத்தினர் அங்கநிறைவு பெற்ற இதர நபர்களைப் போன்றே பூரண கல்வியும், வேலைப் பயிற்சியும் பெறுகின்றனர் எனவும், ஒரு சிலருக்கே விசேஷ நிலையங்கள் வேண்டியுள்ளன எனவும் கூறுகின்றனர். ஆயினும், வலுவு இழந்தோரின் வாழ்வைச் சீர்ப்படுத்துவதற்கு வாய்ப்பு அளிக்க நவீன புனர்வாழ்வு முறைகளின் கீழ் விசேஷ வசதிகள் கிடைக்க வகைசெய்யப் பட்டுள்ளன. வைத்திய சிகிச்சை காலத்துக்குக் காலம் செய்யப்படும் உடற் பரிசோதனை, ஆலோசனைகள் அளித்தல், தொழிற் பயிற்சி, வேலை தேடிக்கொடுத்தல், நலன்புரி சேவை, கல்வி முதலியன இத்தகைய வழிகளுள் சிலவாகும். இத்தகைய புனர்வாழ்வு முறைகளினல் வலுவிழந்தவர்கள் தம்மைப் பூரணமாக சமூக, பொருளாதார சூழ்நிலையில் செம்மைப்படுத்திக்கொள்வதுடன் தமக்குள்ள ஆற்றலையும் பயன்படுத்திக்கொள்ளலாம். இது நீண்ட காலத்தையும் அதிக பணத்தையும்கொள்ளும் முறைகளாக இருந்தபோதிலும், அது அவசியம் செய்யப்படவேண்டிய முதலீடேயாகும்.

மோசமான உடல், உளக் குறைபாடுகள் உள்ள சிலர்கூட, அதிசயிக்கத்தக்க அசாத்தியம் எனத் தோன்றக் கூடிய செயல்களைப் புரிந்துள்ளனர்.

### * பீதோவன் சாதனை

உதாரணமாக பீதோவன் தமது மகத்தான, உலகம் போற்றும் ஒன்பதாவது இணைப்பிசையை முற்றும் செவிடாக இருக்கும்போதே எழுதினர். அது வியன்னவில் அரங்கேற்றப்பட்டபோது பீதோவனும் பிரசன்னமாயிருந்தார். எனினும் அவரது அற்புத இசைமைப்பைக் கேட்டு இன்புற்ற ரசிகர்கள் ஆனந்த மேலீட்டினல் செய்த கரகோசத்தைக்கூட அந்த இசை மன்னன் கேட்க முடியவில்லை. அவர் திரும்பிப் பார்த்த போதுதான் மதுர சங்கீதத்தை ரசித்த மக்களின் ஆனந்த ஆர்ப்பரிப்பைக் காண முடிந்ததாம். ஹெலன் கெல்லரை மற்ருேர் உதாரணமாகக் காட்டலாம். அம்மாது செவிடு, குருடு, ஊமை. ஆயினும், அயராத உழைப்பினலும், கட்டுப்பாடான புனர்வாழ்வுத் திட்டத்தினலும் ஒரு பூரண, லட்சியபூர்வமான வாழ்வை நடத்தி, உலகில் உள்ள துன்புறும் மக்களுக்கு நம்பிக்கை ஊட்டும் ஒரு பேரொளியாகத் திகழ்கிருர். ருேயல் விமானப் படையில் பறக்கும் சிங்கம் எனப்பெயரெடுத்த டக்ளஸ் பேடர் தமது கால்கள் இரண்டையும் இழந்த பின்னரும் தமது திறமைகளைத் தொடர்ந்து காட்டி வந்தார். அங்கக் குறைபாடுகள் இருந்தும், வாழ்வை வெற்றியாக்கியவர்கள் பலர் இருக்கின்றனர்.

(3 ம் பக்கம் பார்க்க)

# 'ஒருவருக்கேனும் உணவில்லையாஞல் முன்னேற்றமென்பதில் அர்த்தமில்லை'

— மகாதேசாதிபதி

**அகில உலகிலும் கோடிக்கணக்கான மக்கள் பசிப்பிணியால் வாடி வதங்குகின்ருர்கள் என்பதும், இன்னும் கோடிக்கணக்கான மக்கள் தங்கள் வாழ்க்கையைச் செவ்வனே நடத்த போதிய உணவின்றித் தவிக்கின்ருர்கள் என்பதும் யாவரும் நன்கறிந்த விஷயமாகும். விவசாய விஞ்ஞானத்திலும், உணவு உற்பத்தியிலும் பாதுகாப்பிலும் அண்மைக்காலத்தில் ஏற்பட்ட முன்னேற்றம் காரணமாக, உலகத்திலுள்ள சகல மக்களுக்கும் போதிய உணவு ஏற்பாடு செய்தற்குரிய அறிவு உண்டு. எனினும் பசிப்பிணி ஒழிப்புப் பிரச்சினையை முற்ருகத்தீர்க்க முடியவில்லை. இதன் அத்தியாவசியத்தையும் ஒருங்கு சேர்ந்து முயல்வதன் முக்கியத்துவத்தையும் உலகத்து மக்கள் உணராதிருப்பதே முக்கிய காரணமாகும்.**

ஆகவே, பசிப்பிணி ஒழிப்பு இயக்கமானது, உலகத்து மக்களுக்குப்போதிய உணவு அளிக்கும் பிரச்சினையை நன்கு விளங்கிக் கொள்ளவும், உணவு வழங்கலுக்கும் ஆகக் குறைந்த தேவைக்குமிடையே யுள்ள குறைபாட்டினைச் சமாளிக்கக் கூடிய முறைகளைக் கையாளுவதில் கவனஞ் செலுத்தவும், இப்பிரச்சினையைத் தீர்க்க முன்வரும் தொண்டர்களின் சேவையை ஒரு முகப்படுத்திக் கொள்ளவும் ஊக்கிவிடவும் பிரதான நோக்கமாகக் கொண்டுள்ளது. பசிப்பிணி ஒழித்தல் போன்ற மானிட அடிப்படைப் பிரச்சினையைத் தர்மப் பணம் கொடுப்பது போன்ற இதுவரை அனுடிக்கப்பட்ட முறைகளாலோ சாதாரண சமூகசேவை முறைகளாலோ தீர்த்து விட முடியாது என்பதும், தேசீய அடிப்படையில் மாத்திரமன்றி சர்வதேச அடிப்படையிலும் ஒருங்கிணைந்த முயற்சியாலேயே தீர்த்துக்கொள்ள முடியும் என்பது இப்பொழுது தான் நன்கு உணரப்படுகின்றது.

ஆகவே தனி ஒருவனுக்கு உணவில்லையாஞல் மனித சமூகம் பூரண விருத்தி அடைந்து விட்டதென, சகல ஆக்கவசதிகளுமுள்ள இக்காலத்தில், சொல்ல முடியாது.

எங்கள் நாட்டைப் பொறுத்தவரையில் இந்த இயக்கம் எவ்வளவு முக்யத்வம் வாய்ந்தது என்பதை யான் வற்புறுத்திச் சொல்ல வேண்டிய அவசியமே இல்லை. முற்ருகப் பசிப்பிணியால் தாக்கப்படும் பிரச்சினை எங்கள் மத்தியில் இல்லாதிருந்த போதிலும், எங்கள் குடிசனத் தொகையில் போஷாக்கில்லாதவர்களனைத்தும் போஷாக்குக்குறைவானவர்களினதும் தொகை வீதம் கூடுதலாகவே இருக்கிறது. மிகவும் கஷ்டப்பட்டும் தேசீய பொருளாதாரத்தைப் பெரிதும் பாதிக்கும் அளவிற்ருன் பசிப்பிணியை எதிர்த்துப் போராடி வருகிருேம். முன்னெரு காலத்தில் கீழைத்தேய தானியக் களஞ்சியம் எனப் புகழப்பட்டதும் இப்பொழுதும் இயற்கை வளம் குன்ருதிருப்பதுமான எங்கள் நாட்டுக்கு, உணவுப் பொருள் இறக்குமதிக்காக எங்கள் தேசிய வருவாயில் பெருமளவு உபயோகிக்கப்படுகின்றது. இந்த நிலைமையில் பசிப்பிணி ஒழிப்பு இயக்கம் எங்கள் நாட்டில் பல வழியாலும் வரவேற்கத்தக்கதே. முதலாவதாக, மக்களின் அடிப்படைத் தேவையை அதாவது போதியதும் உடல் நலத்துக்கு ஏற்றதுமான உணவுத் தேவையை ஒருமுகப் படுத்துகிறது. இரண்டாவதாக, உணவு விவசாயம் என்பவற்றுடன் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளையும் கஷ்டங்களையும் சனங்கள் அறிந்துகொள்ளும்படி வற்புறுத்துகிறது. மூன்ருவதாக, இவ்வியக்கம், தேசீய அத்தியாவசிய உணர்ச்சியையும், உள்ளூரில் கூடிய அளவுக்கு சுய முயற்சியையும், கூட்டுறவுத் தொண்டினையும், இப்பொதுத் தேசீய முயற்சியில் அரசாங்கமும்பொது மக்களும் ஒன்று கூட்டி ஒத்துழைக்கும் சந்தர்ப்பத்தையும் தூண்டிவிடுவதற்கு வழி கோலுகின்றது. உள்ளூர் முயற்சியையும் அரசாங்க ஆட்சியைச் சாராத மக்கள் பங்குபற்றுவதையும் வற்புறுத்துவது இந்த இயக்கத்தின் முக்கிய அம்சங்களுள் ஒன்ருகும்.

அண்மைக் காலத்தில் குறிப்பாக கடந்த சில மாதங்களுக்குள், விவசாய விருத்தியையும் உற்பத்தியையும் இரு

(3 ம் பக்கம் பார்க்க)

### வங்கி விடுமுறை

**1963, ஏப்ரில் மாதம் 15 ந் திகதி திங்கட்கிழமை கௌரவ கைத்தொழில், உள்நாட்டு, கலாசார விவகார அமைச்சரால் வங்கி விடுமுறை நாளாக பிரகடனஞ் செய்யப்பட்டிருக்கிறது.**

# பிரதம மந்திரியின் செய்தி

இந்த இயக்கத்தின் நோக்கங்களில் நாங்கள் அனுதாபம் கொள்வதற்குக் காரணம் எங்களின் பிரச்சினைகளும் அத்தன்மையானவாகவும், கடுமையானவையாகவும் இருப்பதேயாகும். உலகிலேயே அதி உயர்வான ஜனப்பெருக்க விகிதத்தில் ஒன்றை எமது நாடும் கொண்டுள்ளது. அரசாங்கம் வழங்கும் உதவிகளினால் ஒப்பிட்டுப் பார்க்கும்போது வாழ்க்கைச் செலவு குறைவாகவே உள்ளது. சமூக சேவைகள், பாதுகாப்பு, ஊக்கமூட்டும் திட்டங்கள் யாவும் ஆசியாவிலேயே மிக உயர்வானவை. மறுபுறத்தில் பார்த்தால், எங்கள் உற்பத்தி அளவுகள் இன்னும் குறைவாகவே உள்ளன. தேசிய தேட்டங்களிலும் பார்க்க தேசிய செலவினங்கள் அதிகரிக்கக்கூடிய பெரும் ஆபத்தும் உள்ளது. அதாவது எங்கள் வரவுக்கு மிஞ்சிய செலவு ஏற்படக் கூடிய சூழ்நிலை தோன்றலாம். இதனைத் தனிப்பட்ட நபரைப் போன்றே எந்த நாடும் தாங்கிக்கொள்ள முடியாது.

இதனால்தான் பசிப்பிணி ஒழிப்பு இயக்கம் இந்நாட்டுக்கு மிக்க பொருத்தமும் முக்கியத்வமும் வாய்ந்ததாக விளங்குகிறது. மனிதனின் பிரதான அக்கறையான உணவு, விவசாயப் பிரச்சினைகளை தக்கவாறு புரிந்து கொள்வதையே இவ்வியக்கம் வற்புறுத்துகிறது. சரியான செயல் நடைபெறுதற்கு முன்னர் சரியான விளக்கம் ஏற்படவேண்டும். இதனாலேயே பிரச்சினைகளின் தன்மைகளையும் சிக்கல்களையும் விரிவாக விளங்கவைத்தல் இவ்வியக்கத்தின் முக்கிய நோக்கங்களுள் ஒன்றாகும். உள்நாட்டு முயற்சியைத் தூண்டுவித்து அபிவிருத்தி செய்தலும், தேசம் தன்னை நம்பி வாழச் செய்தலும் இவ்வியக்கத்தின் இரண்டாவது குறிக்கோளாகும். எங்கள் கூட்டுறவு இயக்கம், தன்னுதவித் திட்டங்கள், தொண்டர் சேவைத் திட்டங்கள் ஆகியவற்றின் மூலம் இத்துறையில் ஓரளவு முன்னேற்றம் கண்டுள்ளோம். உற்பத்தியைப் பெருக்க ஒவ்வொரு வழியிலும் தனியார் முயற்சியைப் பெருக்குதல் அவசியமாகிறது. உணவு, விவசாய அபிவிருத்தி சம்பந்தமாகவுள்ள அவ்வேறு அம்சங்களில் அக்கறை கொண்டுள்ள அரசாங்க சார்பற்ற ஸ்தாபனங்கள், குழுக்கள், தனியார் முதலானவர்களையும் அரசாங்கம், இலாக்கா, கழகங்களுடன் சேர்ந்து இவ்வியக்கத்தில் பங்குகொள்ளச் செய்தல் மூன்றாவது குறிக்கோளாகும்.

அபிவிருத்தி செய்வதற்கான போராட்டங்களும் வாதாடங்களும் வேகம் பெறும் எனவும், பிரச்சினைகளின் தன்மையை அறியச் செய்ய உதவும் எனவும் மந்திரி சபை நம்புகிறது. இம் முயற்சிகள் யாவும் வெற்றிகரமாக ஈடேறுதல் சாத்தியமாகும். இந்த இயக்கத்தின் மூலம் இம் முயற்சிகள் பலப்படும் என்பது எனது நம்பிக்கை. உயர்ந்த இலட்சியத்தைக் கொண்ட இவ்வியக்கம் வெற்றியடைய வேண்டும் என வாழ்த்துகிறேன்.

## "பசிப்பிணி ஒழிப்பு வாரத்தில் உதவி புரியுங்கள்"

### அரசாங்க அதிபர்களுக்கு உணவு அமைச்சரின் வேண்டுகோள்

பசிப்பிணி ஒழிப்பு வாரத்தில், இலங்கையில் நிலவிவரும் பசிப்பிணி, போஷாக்கின்மை ஆகிய பிரச்சினைகளை சமாளிப்பதில் ஓரளவேனும் உதவிபுரியக் கூடிய விதத்தில் செயலாற்றுவதில் அரசாங்க அதிபர்கள் ஒவ்வொருவரினதும் சொந்த ஒத்துழைப்பை விவசாய, காணி, நீர்ப்பாசன, மின்சார அமைச்சர் திரு. சி. பீ. டி சில்வா கோரியிருக்கிறார்.

விவசாய அபிவிருத்தி, உணவு உற்பத்தி ஆகிய துறைகளில் சிரமதான அல்லது சுயதேவையைப் பூர்த்தி செய்து கொள்ளும் அடிப்படையில் சரியான வேலைத் திட்டங்களை எத்தனை இடங்களில் மேற்கொள்ள முடியுமோ அத்தனை இடங்களிலும் மேற்கொள்ளுமாறு அமைச்சர் அரசாங்க அதிபர்களைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

இத்தேசிய பிரச்சினையின் அவசரத் தன்மையை மக்களுக்குணர்த்தி சாதனை முறையில் அவர்களின் தீவிர ஒத்தாசையைப் பெற்றுக் கொள்வதே இவ்வியக்கத்தின் முக்கிய நோக்கமென அமைச்சர் குறிப்பிட்டிருக்கிறார்.

இவ்வாரத்தில் அரசாங்க அதிபர்கள் மேற்கொள்ளக் கூடிய வேலைத் திட்டங்களில் சிலவற்றை அமைச்சர் சுருக்கமாக சுட்டிக்காட்டியிருக்கிறார். ஒரு விசேஷ அம்சமாக, கச்சேரி தேசிய சேவை பசிப்பிணி ஒழிப்பு நிதியொன்றை அங்குரார்ப்பணஞ் செய்து வைக்கலாமென்றும், உத்தியோகத்தர்கள் சேமிப்பு முத்திரைகளை வாங்குவதைக் கொண்டு 25 சதத்தை இந்நிதிக்கு வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படலாமென்றும் அவர் யோசனை கூறியிருக்கிறார்.

இயன்றளவு பெருந் தொகையான கிராமங்களில் அல்லது கிராமப்பிரதேசங்களில் வேலைத் திட்ட தொடர்களை பாராளுமன்ற அங்கத்தவர்கள், பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர்கள் ஆகியோருடனும் இதர உத்தியோகத்தருடனும் அரசாங்க அதிபர்கள் கலந்தாலோசித்து ஏற்பாடு செய்யவேண்டுமெனவும் யோசனை கூறப்பட்டிருக்கிறது. இதன்படி பசிப்பிணி ஒழிப்பு வாரத்தில் எப்போதாவது சிரமதான அடிப்படையில் மேற்கொள்ள வேண்டிய கிராம அல்லது ஸ்தல வேலைத் திட்டம் வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

பசிப்பிணி ஒழிப்பு வாரத்திலும் அதற்குப் பிறகும் இவ்வியக்க வேலைத் திட்டத்தில் அரசாங்க அதிபருக்கு உதவிபுரியக் கூடிய ஒரு விசேஷ கிளை ஒவ்வொரு மாவட்ட விவசாயக் குழுவிலும் ஸ்தாபிக்கப்படுவதை அமைச்சர் சிபார்சு செய்திருக்கிறார். இவ்வியக்கத்தில் கலந்து கொள்ளும் அரசாங்கத் தொடர்பற்ற ஸ்தாபனங்களை இக்கிளையில் சேர்த்துக் கொள்ளலாமென்றும் யோசனை கூறப் பட்டிருக்கிறது.

## ஒவ்வொருவரினதும் உதவி அவசியம்

**ஐக்கிய நாடுகள் சபைப் பொதுக் காரியதரிசி திரு. யூ தான் உணவு விவசாய ஸ்தாபன தலைமை அதிபதி டாக்டர் பி. ஆர். சென் ஆகியோர் பசிப்பிணி ஒழிப்பு வாரத்துக்கென கூட்டாக விடுத்த செய்தி.**

ஐக்கிய நாடுகளின் உணவு, விவசாயத் தாபனம் 1963 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 21 ந் திகதிமுதல் "உலகப் பசிப்பிணி ஒழிப்பு வார"த்தைக் கொண்டாடுகிறது. வட மத்திய, தென் மத்திய வலயங்களின் நாட்காட்டிகளில் சமத்துவமான இத்தினம் மகத்துவமானது: இக்காலத்தின்போதுதான் வடமத்திய வலயத்தில் உழுது, பயிரிடப்படுகிறது. தென்மத்திய வலயத்தில் அறுவடை செய்யப்படுகிறது.

இவ்வாறு 1963 மார்ச் 21 ந் திகதி முதல் 28 ந் திகதி வரை நடைபெறவிருக்கும் உலகப் பசிப்பிணி ஒழிப்பு வாரத்தையொட்டி ஐக்கிய நாடுகளின் பொதுக்காரியதரிசி திரு. ஊ தாண்ட் அவர்களும் உலக, விவசாயத்தாபன டிசெக்ரர்-ஜெனரல் டொக்ரர். பீ.ஆர். சென் அவர்களும் கூட்டாக விடுத்த செய்தியில் கூறப்படுகிறது. அச் செய்தி மேலும் கூறுவதாவது :—

பசிப்பிணி ஒழிப்பு இயக்கம் நடைபெறும் 1960 முதல் 1965 வரையுள்ள ஆண்டுகளின் நடுப்பகுதியில் இந்த வாரம் வருகிறது. இந்த இயக்கம் அதன் இரண்டாவது கட்டத்தையடையும் போது கோடிக்கணக்கானோரைப் பங்குபெறச் செய்வதன் மூலம் இந்த இயக்கத்தில் உலகம் பூராவும் ஒரு உத்வேகத்தை அளிப்பதற்கு இந்த வாரம் அமைக்கப் பட்டிருக்கிறது. ஐக்கிய நாடுகளின் பத்தாண்டு கால அபிவிருத்திக்கான குறிக்கோள்களை எய்துவதில் பொதுமக்கள் பங்குபற்றும் முதலாவது சந்தர்ப்பங்களிலொன்றை உலகப் பசிப்பிணி ஒழிப்பு வாரம் நல்கும் இவ்வாரத்தின்போது சுயதேவையைப் பூர்த்தி செய்துகொள்ளத்தக்க பொருளாதார, சமூக வளர்ச்சியில் அபிவிருத்தியடைந்து வரும் எல்லா நாடுகளும் முன்றேறும் என்று நம்பப்படுகிறது.

உலக சமயத்தாபனங்கள், தேசிய பசிப்பிணி ஒழிப்புக் கமிட்டிகள், உயர் தொழில், கைத்தொழில் குழுக்கள் மற்றும் முன்னேற்ற மடைந்துள்ளவையும் அபிவிருத்தியடைந்து வருபவையுமான நாடுகளிலுள்ள சமுதாயத்தின் மாபெரும் தாபனங்கள் யாவும் இந்த வாரத்தில் பங்குபற்றத் திட்டமிட்டு வருகின்றன. எல்லாவற்றிலும் மேலாக இவ்வாரத்தின் செய்தி தனிப்பட்ட ஒவ்வொருவருக்கும் விடுக்கப்படுகின்றது. இம் மகத்தான கூட்டு முயற்சிக்கு ஒவ்வொருவரும் தங்கள் பங்கை அளிப்பார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாரத்தின்போது, உலகப் பிரச்சனைகளான வறுமை, பசிப்பிணி ஆகியவற்றில் சிரத்தையுள்ள ஒவ்வொருவரும் தனிப்பட்ட நடவடிக்கை எதையாவது மேற்கொள்வதன் மூலம் இந்த இயக்கத்தின் நீண்டகாலக் குறிக்கோள்களை எய்துவதற்குத் துணை புரிவார்களென்று நம்புகிறோம். தனிப்பட்ட நடவடிக்கை எதுவாக இருந்தபோதிலும், அது அடையாள பூர்வமாக இருந்தாலும் சரி, செயல் முறை நடவடிக்கையாக இருந்தாலும் சரி, அவ்வாறு தனி நபர்கள் பங்குபற்றுவதன் மூலமே இந்த வாரம் வெற்றிகரமாகக் கொண்டாடப்படலாம்.

## வலுவு குறைந்தவர்களின் தினம்

### எட்டு மொழிகளில் சுவரொட்டிகள்

வலுவுகுறைந்தவர்களின் புனருத்தாரணத்திற்கான சர்வதேச சங்கம் 53 நாடுகளிலுள்ள தனது 102 அங்கத்துவ ஸ்தாபனங்களின் ஒத்துழைப்புடன் வலுவுகுறைந்தவர்களின் நான்காவது உலக தினத்தை 1963, மார்ச் மாதம் 17 ந் திகதியன்று கொண்டாடியது. இச்சங்கத்தின் தலைமைக் காரியாலயம் நியூயார்க் நகரில் உளது.

வலுவுகுறைந்தவர்களின் நான்காவது உலக தினத்திற்கான சர்வதேச சுவரொட்டிகள் உரோமில் எட்டு மொழிகளில் அச்சிடப்பட்டு 53 நாடுகளுக்கு அனுப்பப்பட்டன. இச்சுவரொட்டிகளில், காயமடைந்த ஒரு தூக்கணங் குருவியைத் தங்கள் இறக்கைகளில் தாங்கிக் கொண்டு ஒற்றுமைப் பிணைப்பிற்கோர் எடுத்துக்காட்டாக நீல வானிலே பறந்து செல்லும் தூக்கணங் குருவிகளின் கூட்டமொன்று காட்சி தருகின்றது. இச்சுவரொட்டி, வலுவுகுறைந்தவர்களுடனுள்ள ஒற்றுமையையும் அவர்களுக்குக் காட்டப்படும் சிரத்தையையும் குறிப்பிடும் சின்னமாக மட்டுமல்லாமல் தங்கள் பிரச்சினைகளில் அக்கறை கொண்டுள்ள எல்லோரும் சமுதாயத்தில் தங்கள் சாதாரண வாழ்க்கைக்குத் திரும்பிச் செல்லும் பொருட்டு செய்யப்படும் சர்தேவச ஒத்துழைப்பின் அறிகுறியுமாகும்.

இலங்கையில், சமூக சேவைப் பகுதியின் க்ஷேமாபிவிருத்தி உத்தியோகத்தரின் சங்கம் இலங்கை வலுவு குறைந்த குழந்தைகளின் உதவிச் சங்கத்துடன் சேர்ந்து இத்தினத்தைக் கொண்டாடும்.

## இலங்கைப் பிரதமரின் அனுதாபச் செய்தி

இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி டாக்டர் இராஜேந்திர பிரசாத் அவர்களின் மறைவு குறித்து அனுதாபம் தெரிவித்து இந்தியப் பிரதமர் பண்டிட் நேருவுக்குப் பின்வரும் செய்தியை இலங்கைப் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா அனுப்பியுள்ளார் :

"இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி டாக்டர் இராஜேந்திர பிரசாத் காலமான செய்தியைக் கேட்டு நான் துக்கத்தில் ஆழ்ந்தேன். அவருடைய மரணத்தைக் குறித்து இந்தியாவில் மட்டுமன்றி உலகெங்கும் துக்கம் அனுஷ்டிக்கப்படும் என்பது திண்ணம். திரு. இராஜேந்திர பிரசாத் தமது தலைமை வகிக்கும் பேராற்றலாலும் நேர்மையாலும் உலகெங்கும் மரியாதை செய்யப்பட்டார். இந்தியா அவருடைய மறைவினால் மதிப்புக்குரிய தியாகசீலரான தலைவர் ஒருவரை இழந்து விட்டது. அவருடைய மரணம் உங்களுக்குப் பேரிடியாக இருக்கும் என்பதை நான் அறிவேன். நீங்கள் தோழர் ஒருவரை, இத்தனை ஆண்டுகளாக இந்தியாவின் நல்வாழ்வுக்கு வழிகாட்டி வந்த முதிர்ந்த இராஜ தந்திரியொருவரை இழந்துவிட்டீர்கள். இந்தத் துக்ககரமான சந்தர்ப்பத்தில் துக்கம் அனுஷ்டிப்பதில் நானும் இலங்கை மக்களும் உங்களுடனும் உங்கள் மக்களுடனும் சர்ந்து கொள்கிறோம்"

பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா தமது ஆழ்ந்த அனுதாபத்தை இந்தியாவிலுள்ள இலங்கை ஹை கமிஷன் மூலமாக காலஞ்சென்ற டாக்டர் பிரசாத்தின் குடும்பத்தினருக்கும் தெரிவித்துள்ளார்.

# உள்ளிருள் நீக்கும் விளக்கு

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள்

திருவள்ளுவர் திருநாளாகிய 11.3.63 ல் நாவலர் பாடசாலையில் பேசியது.

அறந்தகளி ; ஆன்ற பொருள்திரி ; இன்பு
சிறந்தநெய் ; செஞ்சொல்தீ ; தண்டு—குறும்பா ; வா
வள்ளுவனு ; ரேற்றினுர் வையத்து வாழ்வார்கள்
உள்ளிருள் நீக்கும் விளக்கு.

உலகத்தை மூடித் தொல்லைகளைப் பெருக்குகின்ற இருள் இருவகை. ஒன்று புற இருள். மற்றையது அக இருள். புற இருளிற் பொல்லாதது அகஇருள். இதற்கு அறியாமை என்பது பொருத்தமான பெயர். புற இருளைப் போக்குதற்கு எத்தனையோவகையான சாதனங்களை மனிதன் கண்டு பிடித்திருக் கின்றான். அதனுல் நாகரிகம் மிக்க வன் தான் என்றும் எண்ணுகிறான். இப்படிப்பட்ட நாகரிக மனிதனிடம் அக இருளைப் போக்குதற்கு எவ்வித சாதன மும் இல்லை. பழைய காலத்திலே காடுகளில் வசித்த முனிவர்களிடம் புற இருளைப் போக்குதற்கு நூதனம் நூதனமான இக்காலத்துச் சாதனம் எதுவும் இல்லை. ஆனுல் அவர்கள் அக இருளைப் போக்குஞ் சாதனங்களையே சதா சிந்தித்துக் கொண்டிருந்தார்கள். அப்படிப்பட்ட முனிவர்களின் வர்க்கத் தைச் சேர்ந்தவர் ஒருவர்தாம் தெய் வப்புலமைத் திருவள்ளுவநாயனுர். அவர் அறியாமை இருளில் மூழ்கி மயங் கிக்கிடக்கிற மனிதவர்க்கத்துக்கு இரங்கி, அக இருளைப் போக்குதற்குரியதாகிய விளக்கைக் கண்டுபிடித்து, அதனை ஏற்றி, நமக்கு உபகரித்திருக்கின்றுர். இதுகாறும் இவ்விஷயத்தில் முயற்சி யெடுத்த மகான்கள் அத்தனைபேரும் பெற்றுக் கொள்ளாத வெற்றிப்பாட் டைத் திருவள்ளுவர் பெற்றிருக்கின்றுர். அதனுலே அவர் தேவர் என்றும் தெய் வப் புலவர் என்றும் நாயனுர் என் றும் மகான்களாற் போற்றப்படுகின்றுர்.

அவர் ஏற்றி உபகரித்திருக்கும் விளக் குக்கு, வையத்துவாழ்வார்கள் உள்ளி ருள் நீக்கும் விளக்கு என்று பெயர். அந்த விளக்குத்தான் அருமைத் திருக்குறள்.

அத்திருக்குறள் விளக்குக்கு "அறந்த களி" அறத்துப்பால் தகளி. "ஆன்ற பொருள் திரி" தகளியில் இடுவதாகிய திரி பொருட்பால். "இன்பு சிறந்த நெய்" தகளியில் திரிக்கு உபகாரமான நெய் இன்பு. அஃதாவது காமத்துப் பால் "செஞ்சொல் தீ" திரி நுதிதோ றும் ஏற்றிய ஒளிச்சுடர் செம்மையா கிய சொற்கள் ஆகும். "தண்டு குறும் பா" இப்படிப்பட்ட அருமையான குத்து விளக்கின் தண்டு குறட்பாவாகும்.

அறம் பொருள் இன்பங்களின் தொ டர்பு, தகளிதிரி நெய் இவற்றின் தொடர்பில் வைத்துக் கூறப்பட்டது.

அறத்துப்பாலின் பயன் அறன்வலி யுறுத்தல். அஃதாவது மனத்துக்கண் மாசிலனுகுதல். மனமாகிய தகளியை மாசின்றி வைத்துக் கொள்வதே அறப் பயன்.

மாசின்றிய மனத்துக்கே பொரு ளின் இரகசியம் புலமாம். அவ்விரகசி யமே நீத்தார் பெருமை. "சுவை யொளி ஊறு ஓசை நாற்றம் என்றைந் தின் வகை தெருவான் கட்டே உலகு" உலகப் பொருளை உபயோகிக் கும் முறையை அறிந்தவர்கள் உலகத் தை நீத்த முனிவர்களே. தசரதன் தன் அரசியலில் பெற்றகரும் பேருகக் கருதிய பெரும் பொருள் வசிட்டர் என்கின்ற நீத்தாரேயாம். துரியோ தனன் யாதவப் படையைப் படைத் துணையாகப் பெற்றுத் திருப்தி எய்தி னுன். அருச்சுனன், யாதவனும் நிரா யுத பாணியுமான கிருஷ்ணனை மாத் திரம் பார்த்தசாரதியாகப் பெற்றுப் பெருமை யடைந்தான். இது பொருளின் இரகசியம்.

அப்பால் எது காமிக்கத்தக்கதோ, அதைக்காமிப்பதே இன்பு. அதனி யல்பு வான்சிறப்பில் வைத்தே தப் பட்டது. வானின் இரகசியம் அறிந்தோர் க்கே காமத்துப் பாலினிரகசியம் விளங் கும். சுப்பிரமணியரின் பன்னிருகை களில் ஒருகை வானத்துப்பால் (வான் சிறப்பு). அதற்கிணையான மற்றக்கை காமத்துப் பால்.

"ஒருகை, நீனிற விசும்பின் மலிதுளி பொழிய,
ஒருகை வானர மகளிர்க்கு வதுவை சூட்ட"—என்பது திருமுருகு.

முப்பாலின் பாயிரம் அறன்வலி யுறுத்தல், நீத்தார் பெருமை, வான் சிறப்பு என்னும் மூன்றுமாம்.

மூன்றும் எய்தும் அரும்பயன் கடவுள் வாழ்த்து.

முப்பால் விளக்கை ஏற்றும் முறையில் ஏற்றி நோக்கினுல், "உலக ஆதிபகவன் முதற்று" என்பது தெளிவாகும். உல குக்கு ஒரு வினைமுதல் உண்டு என்பது தெரியும். அவ்வினை முதலின் பாதங் களை வணங்குவதே கற்றதனுலாய பயன் அப்பாதங்களே கவலைகளைப் போக்கும் அருமருந்து.

உலகத்தின் கருத்தாவைக் காட்டி அவன் பாதங்களைப் பற்றச் செய்து கவலைகளைப் போக்குவதாகிய உள்ளிருள் நீக்கும் விளக்கு, அஃதாவது தெய் வப் புலமைத் திருவள்ளுவநாயனுர் அருளிய திருக்குறள் விளக்கு, ஒவ்வொரு மனிதனின் அகத்திலும் பிரகாசிப்ப தாக.

அருமை விளக்கை அருளிய நாயனுரை வணங்கித் துதித்து வாழ்த்துவோமாக.

## வலுவு குறைந்தோரின் ...

(1 ம் பக்கத் தொடர்)

பெரும் தலைவர்களிடையே மாத்திர மன்றி வினைஞர்கள், வியாபாரிகள், காரி யாலய உத்தியோகத்தர்கள், தொழிலா ளர்கள் ஆகியோரிடையேயும் இவற்றைக் காணலாம்.

### வரப்பிரசாதம்

வலுவு குறைந்தோர்களும் சில சமயங் களில் பயனுள்ள வரப் பிரசாதமாக மாறுவது உண்மையே. இதற்குச் சான் ருக நடைபெற்ற நிகழ்ச்சியொன்றை மதகுரு ஒருவர் அடிக்கடி கூறுவதில் மகிழ்ச்சியடைகிறுர். ஒரு சமயம் இவர் கொழும்புக்கு அருகேயுள்ள குருடர் பாடசாலை ஆலயமொன்றில் பிரார்த் தனை நடாத்தினுர். பிரார்த்தனை கீதத் தின் முதல் அடியைப் பாடத் தொடங்கிய வுடன் மின்சார விளக்குகள் சடுதியாக அணைந்துவிட்டன. ஆலயத்தைச் சேர்ந் தோர் பிரார்த்தனை மண்டபத்தில் ஒளி யேற்றுவதற்கு மெழுகு திரிகளுக்காக வும் ஏனைய ஒளி வசதிகளுக்காகவும் ஓடித்திரிந்து கொண்டிருக்கும் நேரத் தில் பிரார்த்தனை மண்டபத்திலிருந்த அந்தகச் சிறுவர்களும் சிறுமிகளும்நடந் தவற்றையறியாது தங்கள் பாட்டுக்கு வழக்கமான தங்கள் இன்னிசையில் பிரார்த்தனை கீதத்தைப்பாடி முடித் தார்கள்.

நவீன இயந்திரங்கள் பொருத்தப்பட்ட தொழிற்சாலைகளிலிருந்து எழுகின்ற இரைச்சல்களும் அவற்றுல் ஏற்படும் அசௌகரியங்களும் செவிடர்களைப்பாதிப் பதில்லை. ஆகவே இவர்களைக் கைத்தொ ழில் தாபனங்களில் வேலைக்கமர்த்துவ தால் பல நன்மைகள் ஏற்படுகின்றன.

வலுவுள்ளோர்களைக் காட்டிலும் வலுவு குறைந்தோர்கள் அதிகமான அளவிலும் சிரமமாகவும் வேலைகளைச்செ கிருர்களென்று மேற்கத்திய நாடு ளில் செய்யப்பட்ட மதிப்பீடுகளும் எடுத் துக் காட்டியுள்ளன. காரணம், தேனீர் அருந்துவதற்காக அவர்கள் சிற்றுண் டிச்சாலைகளுக்குச் சென்று அதிகநேரத் வீணுக்குவதில்லை ; வீண்பொழுது போக் குகளும் அவர்களைக் கவருவதில்லை. இதனுல் அவர்கள் தங்கள் காரியால ஆசனங்களிலேயே அதிக நேரத்தைச்செல விடுகிருர்கள்.

ஆகவே வலுவு குறைந்தோர்கள் சமு கத்துக்குப் பயனுள்ள உழைப்பாளிகள் என்ற முறையில் பணிபுரிய வேண்டி வரும். தாபனங்களில் வைத்து அல் லது அதே மாதிரி பராமரிப்பு நல்க வேண்டிய மோசமாக வலுவு குறைந் தோர் அனேகர் இருப்பதும் உண்மையே. சேமமான சூழ் நிலைகளின் கீழ் உதவி மானியத்துடன் கூடிய வேலை வாய்ப்புத் தேவைப்படும் இன்னும் சிலரும் இருக் கிருர்கள். ஆயினும் தேவையான புனர் வாழ்வு வசதிகள் அளிக்கப்படும் பட்சத்தில் வலுவு குறைந்தோரில் பெரும் பான்மையோர் தங்களுக்கும் தங்கள் குடும்பத்தவருக்கும் சமு கத்துக்கும் பெரும் சுமையாக இருப்ப தற்குப் பதிலாகத் தங்கள் நாட்டுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைவர். அதே சமயத்தில் சமுதாயத்தினதும் நாட்டி னதும் சமூக, பொருளாதார அபிவிருத் திகளுக்குப் பணியாற்றும் உரிமைகளும் பொறுப்புகளும் ஏனையோர்களைப்போல வலுவு குறைந்தவர்களுக்கும் உண்டு என்பதையும் உணர வேண்டியிருக் கிறது. இதே போன்று சமுதாயத்தின் வளங்களிலும் சௌகரியங்களிலும் சம மாகப் பங்குபெற எதிர்பார்ப்பதற்கும் அவர்களுக்கு உரிமையுண்டு.

### இலங்கையின் முன்னேற்றம்

இலங்கையில் வலுவு குறைந்தோர் களுக்குப் புனர் வாழ்வளிக்கும் முறை கள் கணிசமான அளவில் அறிமுகப்படுத் தப்பட்டுள்ளதோடு இத்திட்டம் படிப்படி யாக விஸ்தரிக்கப்பட்டு வருகின்றது. சிறிய அளவில் ஆரம்பிக்கப்பட்ட இந்த முயற்சிகள் ஏற்கனவே சிறந்த பயன் களை அளித்துள்ளன. இப்போது வீட் டில் செய்யப்படும் கைத்தொழில்களி லும் பொதுக் கைத்தொழில்களிலும் ஈடுபட்டுள்ள தகுதியான பயிற்சி பெற்ற வலுவு குறைந்த பணியாளர்கள் செய் யும் கை வண்ணங்களை வலுவுள்ள திற மையான பணியாளர்களுடன் ஒப்பிடும் போது சிறந்தவையாகக் காணப்படு றன. இந்த உதாரணங்களைக் கொண்டு வலுவு குறைந்தோருக்குப் புனர்வாழ் வளிப்பதனுல் ஏற்படும் நன்மைகள் நன்கு தெளிவாவதோடு இலாபந்தரும் திறமையான வேலைகளை பயிற்சி யளிக்கப்படுதற்கு இவர்கள் அருகதை யுடையவர்களென்றும் ஏற்றுக் கொள் ளப்படுகின்றது. ஆயினும் இது சுலப மல்ல.

நீண்ட காலமாக நிலவிவரும் தப் பெண்ணங்கள் இலகுவில் மறைந்துவிடு வதில்லை. கொழும்பிலுள்ள தாபன மொன்றில் இப்போது வேலை செய்யும் அந்தகரான சுருக்கெழுத்துத் தட்டெ ழுத்தாளர்களின் விடயம் இதற்குச் சான் ருக விளங்குகின்றது. பூரணதகைமை பெற்ற அந்தகரான சுருக்கெழுத்துத்தட் டெழுத்தாளர் இருவரை வேலைக்கமர்த் துவதற்கு ஆலோசிக்கப்பட்டபோது ஆரம்பத்தில் வழக்கமான தப்பபிப்பி ராயங்கள் நிலவியதோடு சில எதிர்ப்பு களும்கூட இருந்தன. குறுகிய காலப் பரீட்சைக்குப்பின் இப்போது அவர் கள் அந்தக் காரியாலயத்திலுள்ள ஏனைய பணியாளர்களைப் போலச் சிறந்து விளங் கிருர்களென்று கண்டு பிடிக்கப்பட்டுள் ளது. அதனுல் அவர்கள் இங்கு வேலை செய்கிருர்கள்.

முடிவாக, வலுவு குறைந்தோரில் பெருந்தொகையானேர் சமுதாயத்தி லுள்ள இதர நபர்களைப் போன்று பூரணமானதும் உபயோகமானதுமான வாழ்க்கை நடாத்துவதற்கேதுவாகப் புனர் வாழ்வளிக்கப்பட விருக்கின்ற னர் என்பதை இங்கு வலியுறுத்திக்கூற வேண்டியிருக்கிறது. ஆயினும் அவ் வாறு செய்யப்படுதற்கு அவர்களுக்கு வாய்ப்புக்களும் சந்தர்ப்பங்களும் அளிக் கப்பட வேண்டி யிருக்கின்றன. அவர் களுக்குத் தர்மமோ பிச்சைப் பணமோ வேண்டியதில்லை. சமுதாயத்தில் திருப் திகரமான புனர் வாழ்வு பெறுவதான இறுதிக் குறிக்கோளை எய்துவதற்கு ஒத்துழைப்பையும் அபிப்பிராய ஒற்று மையையும் அவர்களுக்கு உதவியளிக்க முன் வருபவர்களின் துணையையுமே அவர்கள் வேண்டுகிருர்கள்.

## 'ஒருவருக்கேனும் ...

(1 ம் பக்கத் தொடர்)

மடங்காக்குவதன் தேவையைப்பற்றிய உணர்ச்சி அதிகரித்துள்ளது. இந்த விழிப்புணர்ச்சி நற்பலனை அளிக்கத் தொடங்கியுள்ள தென்பதற்குச் சான்று உண்டு. ஆகவே எங்கள் தேச மக்களின் சக்தியைத் தூண்டி விடுவதையும், எங் கள் நாட்டு வளங்களை விருத்திசெய்வ தையும் ஆதாரமாகக் கொண்டு, உணவு விவசாய, தாபனத்தின் மூலம் உலகத்து ஏனைய மக்களின் உறுதியான உதவி ஒத்தாசையுடன், இலங்கையில் ஆரம்பிக் கப்படும். பசிப்பிணி ஒழிப்பு இயக்கமா னது, மக்களின் அத்தியாவசிய தேவை யாகிய, உடல், நலம் தரும் போதிய உணவு எங்கள் நாட்டு மக்கள் யாவருக் கும், இடைக்கத்தக்கதாக எங்கள் நாட் டில் சிறந்த முயற்சி எடுக்கக் கூடிய நிலைமைகளை உண்டாக்குவதற்குச் சாதக மான வழிகோலுவதாக இருக்கும்.

பசிப்பிணி ஒழிப்பு இயக்கம் சம்பந்த மாக கௌரவ மந்திரி அவர்களும், அவருடைய கமிட்டி அங்கத்தவர்களும் எடுக்கும் முயற்சிகளுக்காக அவர்களை யான் பெரிதும் பாராட்டுகிறேன். இந்த இயக்கத்தின் வெற்றி மக்களின் ஆதர வில் தங்கியிருக்கின்றது என்பதிற் சந்தேகமில்லை. இத்தகைய ஆதரவு பூரணமாகக் கிடைக்கும் என நான் நம் புகின்றேன்.

## அரசாங்க அறிவித்தல்கள்

### கூட்டுறவுத் துறை

**கூட்டுறவுச் சங்கங்களின் மனேஜராக அல்லது காரியதரிசியாக நியமனம் பெற விரும்புவோருக்குரிய பயிற்சி**

பொல்கொல்லே, காலி, நீர்கொழும்பு, இரத்தினபுரி, அனுராதபுரம், பண்டாரவளை, குருநாகல், மட்டக்களப்பு ஆகிய இடங்களிலுள்ள கூட்டுறவுக் கல்வி நிலையங்களில் நடைபெறும் மேற்படி பயிற்சி பெற விரும்பும் கூட்டுறவுப் பணியாளரும், ஏனையவரும், 1963 ம் ஆண்டு எப்பிரல் மாதம் 15 ம் திகதிக்குப் பிந்தாமல், தலைவர், கூட்டுறவுக் கல்லூரி, பொல்கொல்லே என்ற விலாசத்திற்குத் தங்கள் விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும். விண்ணப்பபத்திரங்களை விண்ணப்பம் செய்பவர்கள் வசிக்கும் பகுதிக்குரிய உதவிக் கூட்டிறவு ஆணையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பொல்கொல்லே நிலையத்தில் பயிற்சி பெற விரும்புவோர் பொல்கொல்லேயின் கூட்டுறவுக் கல்லூரித் தலைவரிடமிருந்து விண்ணப்பப்பத்திரங்களைப் பெறலாம்.

கேகாலே, சிலாபம், கொழும்பு, களுத்துறை, மாத்தறை, மாத்தளை, தங்காலே, திரிகோணமலே, மன்னர் ஆகிய இடங்களிலுள்ள கூட்டுறவுப் பகுதிச சமாசங்களால நடத்தப்படும் கல்வி நிலையங்களில் பயிற்சி பெற விரும்புவோர் பத்திரிகைகளில் அலலது வேறு முறையில் அறிவித்தல் கொடுக்கப்படும் பிரகாரம் அப்பகுதிக்குரிய கூட்டுறவுச் சமாசத்திலிருந்து அல்லது கொழும்பிலுள்ள இலங்கைக் கூட்டுறவுச் சம்மேளனத்திலிருந்து விண்ணப்பப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பம் செய்பவர் தான் தெரிவு செய்யும் கல்வி நிலயத்தைக் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும். அவர் அக்கல்வி நிலையப் பகுதியில் வசிப்பவராயிருத்தல் வேண்டும். ஒரு நிலையத்திற்குத் தெரிவு செய்யப்பட்டவர், எக் காரணம் கொண்டும், இன்னெரு நிலையத்திற்கு மாற்றப் படமாட்டார்.

யாழ்ப்பாணத்தின் கூட்டுறவுக் கல்லூரியிலும் இப்பேர்ப்பட்ட பயிற்சி வகுப்புக்கள் வடபகுதிக் கூட்டுறவுச் சம்மேளனத்தால் நடத்தப்படும். இதிற் சேர விரும்புவோர், விண்ணப்பங்கள் கோரப்படும் பொழுது, யாழ்ப்பாணக் கூட்டுறவுக் கல்லூரித் தலைவருக்குத் தங்கள் விண்ணப்பங்களை அனுப்பலாம்.

#### பயிற்சி விபரங்கள்

**காலம்.**—18.6.1963—18.10.1963.

**பாடங்கள்.**—கூட்டுறவு, கணக்குப்பதிவு, செயலாளர் தொழிற் பயிற்சி விறபனவு முறையும் திருவாகமும்.

மட்டக்களப்பு, மன்னர், திரிகோணமலே, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில தமிழிலும், ஏனைய இடங்களில் சிங்களத்திலும் பயிறசி வகுப்புககள் நடத்தப்படும்.

**பயிற்சிக்குரிய தராதரமும் பயிற்சியாளர் தெரிவும்.**—பின்வரும் ஒழுங்கின்படி ஒவ்வொரு நிலையத்திற்கும் வேண்டிய பயிறசியாளர் தெரிவு செய்யப்படுவர். முதற் பிரிவிலிருந்து போதியளவு பயிறசியாளர் கிடைக்காவிடின், அடுத்த பிரிவிலிருந்து தெரிவு செய்யப்படும் :—

(1) சிரேஷ்ட பாடசாலே தராதரப் பரீட்சையில் அல்லது பொதுத் தராதரப் பரீட்சையில் சித்தி பெற்றவராய் கூட்டுறவுச் சஙகங்களில் பணியாளராகக் கடமையாற்றுபவர்;

(2) 18.6.63 ல் 45 வயதிற்குக் குறைந்தவர்களாய் தற்பொழுது கூட்டுறவுச் சங்கங்களில் கடமையாற்றுபவர்கள் ;

(3) 18.6.1963 ல் 18 வயதுக்கும் 40 வயதுக்கும் உட்பட்டவராயிருந்து சிரேஷ்ட பாடசாலேத் தராதரப் பரீட்சையில் அல்லது பொதுத் தராதரப் பரீட்சையில் சித்திபெற்றிருந்த பொழுதிலும் கூட்டுறவச் சேவையில் இல்லாதவர் ;

(4) 18.6.1963 ல் 18 வயதுக்கும் 40 வயதுக்கும் உட்பட்டவராயிருந்து, கனிஷ்ட பாடசாலேத் தராதரப் பரீட்சையில் சித்திபெற்றிருந்த பொழுதிலும் கூட்டுறவுச சேவையில் இல்லாதவர்.

மேற்தரப்பட்ட 1 ம் 2 ம் பிரிவைச் சேர்ந்தவர்கள் தங்கள் விண்ணப்பப் பத்திரங்களை தாம் கடமையாற்றும் கூட்டுறவுச் சங்கத்தின் சிபார்சுடன் சங்க மூலம் அனுப்பிவைக்கவேண்டும்.

விண்ணப்பங்களைப் பரிசோதனைசெய்து, தேவையாயின் பிரவேசப் பரீட்சை நடத்தப்படும்.

1 ம் 2 ம் பிரிவுகளிலிருந்து ஒரு நிலையத்திற்கு வேண்டிய பயிற்சியாளரைத் தெரிவு செய்யமுடியாவிடின், காலி இடங்களில் நிரப்புவதற்கு 3 ம் பிரிவினர் பிரவேசப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். 3 ம் பிரிவிலும் போதிய பயிற்சியாளர் கிடைக்காவிடின், 4 ம் பிரிவினர் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

அழைக்கப்படுகிறவர்களுக்குப் பரீட்சையின் திகதி அறிவிக்கப்படும். 1 ம் 2 ம் பிரிவுகளைச் சேர்ந்தவர்களும் பரீட்சைக்கு அழைக்கப்படும் ஏனையவர்களும், பயிற்சிக்குத் தெரிவு செய்யப்படின், ரூபா 2/- பிரவேசப் பணமாகக் கட்ட வேண்டும்.

**பிரவேச விண்ணப்பம்.**—ஒவ்வொருவரும் விண்ணப்பத்துடன் பின்வருவனவற்றை அனுப்பவேணடும் :—

(1) பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் ஒரு பிரதி (மூலப்பிரதி, நேர்முகப்பரீட்சைக்குக் கொண்டுவரப்படவேண்டும்) ;

(2) கல்வித் தராதரப் பத்திரங்களின் பிரதிகள் (மூலப் பிரதிகள் நேர்முகப் பரீட்சைக்குக் கொண்டுவரப்படல் வேண்டும்) ;

(3) தான் கடமையாற்றிய அல்லது கடமையாற்றும் கூட்டுறவுச் சங்கம் அளித்த அத்தாட்சிப்பத்திரத்தின் ஒரு பிரதி (மூலப் பிரதி நேர்முகப் பரீட்சைக்குக் கொண்டு வரப்படல் வேண்டும்)

விண்ணப்பப் பத்திரங்கள் 15.4.1963 க்குப் பிந்தாமல் கூட்டுறவுக் கல்லூரித் தலைவருக்குக் கிடைக்க வேண்டும்.

மேற்தரப்பட்ட நிபந்தனைகளை நிறைவேற்ருத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

**கட்டணம்.**—பயிற்சி இலவசம். ஆனல் கடைசிப் பரீட்சைக்கு ரூபா 2.50 அறவிடப்படும்.

**பரீட்சையும் பத்திரமும்.**—கூட்டுறவுப் பணியாளர தராதரப் பத்திரப் பரீட்சை 1963 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 19 ம், 23 ம் திகதிகளுக்கிடையில நடைபெறும். தேறுபவர்கட்கு " கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம் " வழங்கப்படும்.

**பயிற்சியின் பயன்.**—இப்பத்திரம் பெறும் யாவருக்கும் வேலைக்கிடைக்குமென்று கூட்டுறவுத்துறை உத்தரவாதம் அளிக்கவில்லை.

T.D.L. பீரிஸ்,
கூட்டுறவு ஆக்க ஆணையாளருக்கும்
கூட்டுறவு சங்கப் பதிவாளருக்குமாக.

கொழும்பு,
1963 ம் ஆண்டு மாச்சு மீ 6 ந உ.

# வலுவு குறைந்தவர்களும் சமூக சேவைப் பகுதியும்

இலங்கையிலுள்ள வலுவுகுறைந்தவர்களுக்கான பணியில் பல அரசாங்கப்பகுதிகள் ஈடுபட்டுள்ளன. சௌக்கியப்பகுதி அதன் சிகிச்சா நிலையங்களிலும் ஆஸ்பத்திரிகளிலும் இவர்களுக்கு வைத்தியமும் சத்திர சிகிச்சையும் செய்துவருகிறது. இவர்களோடு சம்பந்தப்பட்ட கல்விப் பிரச்னைகளை மட்டும் கல்விப் பகுதி கவனித்துக் கொள்கின்றது. ஆனல் இவர்களைப்பற்றிய முக்கிய பொறுப்பு சமூக சேவைப் பகுதியையே சாரும். இப்பகுதி இவர்களின் பராமரிப்பு, சேஷமாபி விருத்தி, புனருத்தாரணம் ஆகிய விஷயங்களைக் கவனித்துக் கொள்கின்றது. இவர்களுக்குத் தொழில் வழங்குதல் ஈற்றில் இவர்களுக்குப் புனர் வாழ்வளித்தல் போன்ற விஷயங்களும் தொழிற் பகுதியுடனும் அரசாங்கத் துறை, தனியார்துறை ஆகியவற்றின் இதர பிரிவுகளுடனும் சேர்ந்து சமூக சேவைப் பகுதியாலேயே நிறைவேற்றப் படுகின்றன.

சமூக சேவைகள் பகுதி, வலுவு குறைந்தவர்களுக்கான சேவைகளை நிர்வகிப்பதற்கும் ஸ்தாபிப்பதற்குமென சில வருட காலத்துக்கு முன் சமூக சேவை உதவி அதிபர் ஒருவரின் பொறுப்பில் ஒரு விசேஷ பிரிவு ஏற்படுத்தப்பட்டது. தொழிற்பயிற்சி அத்தியட்சர், சேஷமாபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமூக சேவை உத்தியோகத்தர்கள், பயிற்சி புனருத்தாரண நிலையங்களின் முகாமையாளர்கள், போன்ற விசேஷ தகுதி வாய்ந்த உத்தியோகத்தர்களின் கோஷ்டி யொன்று இவருக்கு உதவி புரிகின்றது.

இப்பகுதியால் அளிக்கப்படும் முக்கிய சேவைகள் வருமாறு :—

1. செவிடர், ஊமையர், குருடர், அங்கயீனர்கள், உளவளர்ச்சி குன்றியவர்களான வலுவுகுறைந்த குழந்தைகளுக்கும் வயது வந்தவர்களுக்கும் கல்வி, பராமரிப்பு, சேஷமாபிவிருத்தி முதலியவற்றிலீடுபட்டுள்ள தொண்டர் ஸ்தாபனங்களுக்கு உதவியளித்தல்.

2. அரசாங்க நிலையங்களிலும் தனிப்பட்ட ஸ்தாபனங்களிலும் தொழில் பெறுவதற்காக வலுவு குறைந்தவர்களுக்கு தொழிற் பயிற்சியளித்தல்.

3. செவிடர், ஊமையர், குருடர், அங்கயீனர்கள் போன்ற வலுவிழந்தவர்களுக்கு கருவிகள் முதலியவற்றை விநியோகித்தல்.

4. வலுகுறைந்தவர்களுக்கு இப்பகுதியின் பயிற்சி நிலையங்களும் தொழில் நிலையங்களும்.

5. விசேஷ க்ஷேமாபிவிருத்தி உத்தியோகத்தர்களும், சமூக சேவை உத்தியோகத்தர்களும் வலுவுகுறைந்தவர்களின் வீடுகளுக்கு விஜயஞ் செய்வதும் அவர்களுக்கு சேஷமாபிவித்தி சேவைகளை வழங்குவதும்.

6. வலுவுகுறைந்தவர்களை பொருத்தமான தொழில்களில் அமர்த்துவதற்கு விசேஷ சேவைகள்.

7. வலுவுகுறைந்தவர்களுக்கான அரசாங்கத்தினதும் தொண்டர் ஸ்தாபனங்களினதும் சேவைகளை ஒருமுகப் படுத்துதல்.

மேலே கூறப்பட்ட புனருத்தாரண சேவைகள் சிறிதளவிலேயே ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. ஆனல் வழிவகைகள் ஏற்படும்போது இவற்றைப் படிப்படியாக விஸ்தரிக்க எதிர்பார்க்கப்படுகிறது.

# விவசாயப் பொருட்காட்சி

கொழும்பு குதிரைப்பந்தயத்திடலில் மார்ச் மாதம் 22 ந் தேதி அங்குரார்ப்பணஞ் செய்துவைக்கப்படவிருக்கும் விவசாயப் பொருட்காட்சியின் ஒரு பகுதி முழுவதும் போஷாக்குக் குறைவை எதிர்த்துப் போராடுவதில் எடுத்துக் கொள்ளப்படும் நடவடிக்கைகளைச் சித்தரிப்பதாக விருக்கும்.

மார்ச் மாதம் 22 ந் தேதியன்று சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டபின் மூன்று நாட்களுக்கு நடைபெறவிருக்கும் இப்பொருட்காட்சி தேசிய பசிப்பிணி ஒழிப்புக் கமிட்டியாலும் கொழும்பு கனிஷ்ட சங்கத்தாலும் கூட்டாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

சாதாரணமாகக் காணப்படும் நோய்களுக்குக் காரணமாகவுள்ள போஷாக்கு அம்சங்களையும் அவற்றைச் சமாளிப்பதற்கான நடவடிக்கைகளையும் நகர்ந்து செல்லும் சித்திரங்கள் இப்பொருட்காட்சிக்கு விஜயஞ் செய்பவர்களுக்கு விளக்குமென போஷாக்குப் பகுதி ஸ்தாபகர்களுள் ஒருவரான பேராசிரியர் சி. சி. டி சில்வா இன்று கூறினர்.

ஒரு சமமான உணவைப் பெறுவதற்கு பல்வேறு வயதுகளிலும் ஒருவர் உட்கொள்ள வேண்டிய உணவுப்பொருட்களை குறிக்கும் அட்டைப்படங்களும் இலங்கையில் கிடைக்கக்கூடிய மரக்கறி வகைகள் தானியங்கள் முதலியவற்றின் போஷாக்குத் தன்மைகளைக் காட்டும் அட்டைப் படங்களும் காட்சிக்கு வைக்கப் படும்.

கீரை வகைகளைக் கொண்டும் தானியங்களைக் கொண்டும் ருசிமிக்க உணவுகளை குறைந்த செலவில் எவ்வாறு தயாரிக்கமுடியுமென்பதை இலங்கை இல்லக் கிழத்திகள் சங்கம் இப்பொருட்காட்சியில் செய்து காட்டுவார்களென்றும் பேராசிரியர் டி சில்வா கூறினர். இதில் லங்கா மஹில சமத்தி அங்கத்தவர்களும் பங்கு பற்றுவார்கள்.

உப உணவுப் பொருட்களில் பெரும்பாலானவற்றை வீட்டுத் தோட்டங்களில் பயிர் செய்வதைக் கொண்டு இல்லக் கிழத்திகள் எவ்வாறு பணத்தை மிச்சம் பிடிக்க முடியுமென்பதை அவர்களுக்கு உணர்த்தும் நோக்கத்துடன் விவசாயப் பகுதி மாதிரி வீட்டுத்தோட்டமொன்றை அமைக்கத் திட்டமிட்டு வருகிறது.

இல்லக் கிழத்திகள் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் வீட்டுத் தோட்டங்களில் ஒரு டஜன் மிளகாய்ச் செடிகளை உண்டு பண்ணினல் இலங்கை தனது மிளகாய் இறக்குமதிகளை எவ்வளவு சுலபமாக நிறுத்திக் கொள்ள முடியுமென்பதையும் இதர அம்சங்களுடன் சேர்த்து காட்டதாங்கள் முயற்சிப்பதாகவும் விவசாயப் பகுதி உத்தியோகத்தர் ஒருவர் கூறினர்.

விவசாய அபிவிருத்தியையும் உணவுற்பத்தியில் சம்பந்தப்பட்ட இதர அரசாங்கப் பகுதிகள் எவ்வாறு உதவி புரிந்திருக்கின்றன என்பதையும் காட்டும் கூடங்களும் பொழுதுபோக்குக் கூடங்களும் இப்பொருட்காட்சிக்கு விஜயஞ் செய்பவர்களின் நன்மைக்காக திட்டமிடப்பட்டு வருகின்றன.

---

## புனராலோசனைச் சபை

திருவாளர்கள் ஜே. எஸ். குறெஸ்லி, ஜே. வி. எம். பர்ணந்து, ஏ. மகேந்திரராஜா ஆகிய மூவரும் 1963, மார்ச் மாதம் 15 ந் தேதி தொடக்கம் மூன்று வருட காலத்துக்கு வருமானவரிச் சட்டத் (அத்தியாயம் 242) தின் 74 (1) ம் பிரிவின் கீழ் புனராலோசனைச் சபையின் அங்கத்தவர்களாக கௌரவ நிதி அமைச்சர் அவர்களால் நியமனஞ் செய்யப்பட்டிருக்கிறார்கள்.

இலங்கை, வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனல் உறபத்திசெய்யப்பட்ட காகிதததில இலங்கை அரசாங்க அச்சகத்திற பதிப்பிக்கப்பெற்றது.

ஆர் 8422—5,008 (3/63)